பெருநகரசென்னைமாநகராட்சி

செய்திக் குறிப்பு

செ.வெ.எண்.233 நாள் : 23.08.2025

**சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர் பகுதியில் பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்களின் உடலுக்கு மாண்புமிகு மேயர் திருமதி ஆர் பிரியா அவர்கள், இன்று (23.08.2025) மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.**

இன்று (23.08.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகரில், பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமியின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு .மு.மகேஷ் குமார் அவர்கள் மறைந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் திரு.ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**